## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் பிப்ரவரி மாத சாதாரணக்கூட்டம் மார்ச் 2016 வெள்ளிக்கிழமை (04.03.2016) முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் வரும் 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளின் ஒருங்கிணைந்த மின் ஆளுமை பணிகளுக்கு பிரத்யோகமான பொது மென் பொருள்கள் தயாரித்து 10.09.2015 முதல் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பொது மக்கள் நகராட்சிகளுக்கு வரி, வரியில்லா மற்றும் இதர இனங்களின் கீழ் செலுத்த வேண்டிய தொகைகளை வங்கி சாதனங்கள் (Credit Card / Debit card / Internet ) மூலம் எந்த இடத்திலிருந்தும் செலுத்தும் வகையில் வழிவகை செய்ய "Payment Gateway" என்னும் சேவைப்பணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவைப்பணிகளை குளச்சல் நகராட்சிக்கு அளிக்க நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஆன்லைனில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வங்கி வழியாக செலுத்திட சிட்டி யூனியன் வங்கி / எச்.டி.எப்.சி வங்கி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த வங்கிகளுடன் நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்தரவின் பேரில் 22.02.2016 அன்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் நேரடியாக பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சேவைப்பணி குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். அ1/4826/2012)

**தீர்மானம் எண்.1460 பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண். 2**

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் வரும் அனைத்து நகராட்சிகளையும் ஒருங்கிணைந்த மின்ஆளுமையின் கீழ் (Centralised E-Governance) கொண்டுவர இருப்பதால், வரும் 2016—17—ஆம் ஆண்டில் கணினி பயன்படுத்துவோர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கணினி, ஸ்கேனருடன் பிரிண்டர் மற்றும் பயோமெட்ரிக் சாதனம் அமைக்க வேண்டியுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் ந.க.எண்.Roc.No.56898/2009/P4(ITC) நாள்.23.11.2015 கடிதத்தில் ஒருங்கிணைந்த மின்ஆளுமைக்கான கட்டமைப்புகளை செய்து கொள்ள முன்னேற்பாடாக தேவையான கணினி, பிரிண்டர் மற்றும் பயோமெட்ரிக் சாதனம் போன்றவைகளை தயார் நிலையில் வைத்துக் கொள்ள கூறியுள்ளார்கள். எனவே, கீழ்கண்ட மின்னனு உபகரணங்கள் வாங்க வேண்டியிருப்பதால் வரும் 2016—17—ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவு ரூ.6,00,000/—த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் | எண்ணம் | உத்தேச விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | Desktop Computer | 5 | 2,60,000 |
| 2 | Laser Printer with scanner | 4 | 1,50,000 |
| 3 | Network Switch | 5 | 50,000 |
| 4 | Dot Matrix Printer | 3 | 38000 |
| 5 | Bio-metric Device | 20 | 90,000 |
| 6 | Network Accessories | – | 12,000 |
| | Total | | 6,00,000 |

**அ.குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(கோப்பு எண்.AP/2088/2015)**

**தீர்மானம் எண்.1461, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் அமைந்துள்ள தினசரிச்சந்தை வளாகத்திலுள்ள கடைகள், தரைப்பாக கடைகள் மற்றும் நுழைவுக் கட்டணம், பேருந்து நிலைய நுழைவுக் கட்டண ரசீதுகள் **2015–16–ம்** ஆண்டிற்கு அச்சடித்த வகையில் தாசன் ஆப்செட், குளச்சல் அவர்களுக்கு **ரூ.39,745/–** வழங்க கோரியுள்ளார். ஆகவே அன்னாருக்கு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ1/326/2015)

**தீர்மானம் எண்.1462, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை பகுதியில் அமைந்துள்ள சுயஉதவிக்குழு கடை எண்.36 (வெள்ளை ரோஜா)–க்கு டிசம்பர் 2015 மாதத்தோடு உரிமம் முடிவடைவதால் மேலும் 01.01.2016 முதல் 31.12.2019 வரை நீட்டிப்பு செய்து வாடகைத் தொகையிலிருந்து 15% உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | 36 | வெள்ளை ரோஜா சுயஉதவிக் குழு | ரூ. 443/– | ரூ. 509/– |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ1/2035/2015)

**தீர்மானம் எண்.1463, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு அக்டோபர் 2015 முதல் பிப்ரவரி 2016 முடிய நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகை மாத வாரியாக விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அக்டோபர் 2015 மாதம் செலவு செய்யப்பட்ட விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | காய்கறிகள் | ரூ. 61,230/– |
| 2 | அரிசி | 1,860/– |
| 3 | சமையல் பொருட்கள் | 1,17,572/– |
| 4 | பணியாளர் ஊதியம் | 90,000/– |
| 5 | இதர செலவுகள் | 700/– |
| 6 | எரிவாயு | 36,890/– |
| 7 | தயிர் | 17,500/– |
| | **நவம்பர் ‘15 மாதம் செலவு செய்யப்பட்ட விபரம்** | |
| 1 | காய்கறிகள் | 57,775/– |
| 2 | அரிசி | 1,363/– |
| 3 | சமையல் பொருட்கள் | 1,43,782/– |
| 4 | பணியாளர் ஊதியம் | 93,000/– |
| 5 | இதர செலவுகள் | 700/– |
| 6 | தயிர் | 7,650/– |
| 7 | எரிவாயு | 38,640/– |
| | **டிசம்பர் ’15 மாதம் செலவு செய்யப்பட்ட விபரம்** | |
| 1 | அரிசி | 1,860/– |
| 2 | பணியாளர் ஊதியம் | 90,000/– |
| 3 | இதர செலவுகள் | 700/– |
| 4 | சமையல் பொருட்கள் | 1,32,588/– |
| 5 | காய்கறிகள் | 64,890/– |

| | | |
|---|---|---|
| 6 | ரசீதுகள் அச்சடித்தது | 22,680/– |
| 7 | சமையல் பாத்திரம் | 10,000/– |
| | **ஜனவரி ’16 மாதம் செலவு செய்யப்பட்ட விபரம்** | |
| 1 | அரிசி | 1,860/– |
| 2 | பணியாளர் ஊதியம் | 93,000/– |
| 3 | தயிர் | 12,350/– |
| 4 | இதர செலவுகள் | 1,945/– |
| 5 | சமையல் பொருட்கள் | 1,39,923/– |
| 6 | எரிவாயு | 61,215/– |
| 7 | காய்கறிகள் | 65,730/– |
| | **பிப்ரவரி ’16 மாதம் செலவு செய்யப்பட்ட விபரம்** | |
| 1 | அரிசி | 1,510/– |
| 2 | பணியாளர் ஊதியம் | 93,000/– |
| 3 | தயிர் | 16,250/– |
| 4 | சமையல் பொருட்கள் | 1,32,928/– |
| 5 | காய்கறிகள் | 47,235/– |
| 6 | இதர செலவுகள் | 900/– |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். அ1/1117/2015)

**தீர்மானம் எண்.1464, ஒத்திவைக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த திரு.ஜான் மற்றும் திரு.சத்தியதாஸ் என்பவர்கள் ஒப்பந்தப் பணி எடுத்து செய்ததில், அன்னாரிடம் பிடித்தம் செய்யப்பட்ட முன்பணத் தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார்கள். அன்னாரிடம் பிடித்தம் செய்த கீழ்க்கண்ட தொகை காலம்கடந்த முன்பணத்தில் இருப்பதால், அன்னாருக்கு மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) திரு.ஜான் – ரூ. **1,19,266/–**
2) திரு.சத்தியதாஸ் – ரூ. **72,024/–**

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். பி1/158/2016)

**தீர்மானம் எண்.1465, ஒத்திவைக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி வருவாய் உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) அலுவலக பணத்தை கையாடல் செய்தது, நகராட்சி விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையில் குற்றம் நிரூபணம் ஆனது. தனியர் தன் மீதான குற்றச்சாட்டினை நிறுத்தி வைக்க சென்னை, உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். 887/2010–ன்படி வழக்கு தொடர்ந்து, வழக்கு 08.09.2015–ல் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க சட்ட கருத்துரு கேட்க திரு.கிருஷ்ணதாஸ், வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு செலவுத் தொகை ரூ.5,000/– வழங்க கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். சி1/6529/2010)

**தீர்மானம் எண்.1466, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடியில் கிறிஸ்தவ ஆலயம் கட்டுமானம் மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு. பீட்டர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு எதிர் வாதுரை தாக்கல் செய்ய செலவுத் தொகை ரூ.7,500/– திரு.கிருஷ்ணதாஸ், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். சி1/45/2016)

**தீர்மானம் எண்.1467, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவது குறித்து மறு கணக்கெடுப்பு மேற்கொள்ள 18.02.2016 அன்று இணை நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமையில் நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம் முன்னேற்றக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பொது இடங்களில் விழிப்புணர்வு பேனர்கள் வைப்பதற்கு பிளக்ஸ் மற்றும் ரீப்பர் வாங்கப்பட்ட வகையில் ரூ.2,350/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/216/2014)

**தீர்மானம் எண்.1468, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN.74.V-3530—ல் கீழ்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

1) இன்ஜின் ஆயில் மாற்றுதல்
2) ஆயில் பில்டர் மாற்றுதல்
3) டீசல் பில்ட்டர் மாற்றுதல்
4) ஜெனரல் செக் அப் செய்தல்
5) வாகனம் சர்வீஸ் செய்தல்
6) பவர் ஸ்டீயரிங் பெல்ட் மாற்றுதல்
7) வைபர் டேங்க் மாற்றுதல்
8) வீல்கள் அலென்மென்ட் செய்தல்
9) வீல் பேலன்சிங் செய்தல்
10) கூலிங் ஆயில் ரேடியேட்டர் மாற்றுதல்
11) டெயில் லைட் மாற்றுதல்
12) டிங்கரின், பெயிண்டிங் பணிகள்
13) எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல்
14) வைபரேட்டர் புதிதாக மாற்றுதல்
15) பிளை வீல் மாற்றுதல்
16) செல்ப் மோட்டார் ஓவர் ஆயிலிங் செய்தல்.

மேற்காணும் பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.45,000/—ஐ இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மேற்படி பராமரிப்பு பணிகளை மகேந்திரா & மகேந்திரா—வின் அங்கீகாரம் பெற்ற கொடை கார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அலுவலக பணிகள் மற்றும் தேர்தல் பணிகளில் மேற்படி ஈப்பு வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5030/2010)

**தீர்மானம் எண்.1469, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN.75.K-6526—ன் 4 டயர்கள் சேதமடைந்து உள்ளதாலும், பழுதுகள் ஏற்பட்டுள்ளதாலும், மேற்படி வாகனத்தை சரிவர இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நகராட்சி திட்டப்பணிகள், வசூல் பணிகள், பொது சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் குடிநீர் பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, சேதமடைந்துள்ள 4 டயர்களை மாற்றுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக M/S.KODAI CARS PRIVATE LTD., நிறுவனத்தில் வாகன பரிசோதனை செய்யப்பட்டதன் அடிப்படையில் பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியின் படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.45,000/— க்கும், மேற்படி பணிகளை மகேந்திரா & மகேந்திரா—வின் அங்கீகாரம் பெற்ற M/S.KODAI CARS PRIVATE LTD., நிறுவனத்தின் மூலம், இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/7057/2011)

**தீர்மானம் எண்.1470, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

தமிழக அரசின் 2014–15–ம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின் படி, நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி பெறுவதற்கு தகடுகள் (Solar Roof Top Panel) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சி மின்கட்டணத்தை குறைக்கும் வகையில் முதற்கட்டமாக, அலுவலக கட்டிடத்தில் 3 Kw சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி பெறும் தகடுகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேற்படி சூரிய ஒளி தகடுகளில், 2016–17–ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் (Annual Maintenance Cost) மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.20,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/403/2016)

**தீர்மானம் எண்.1471, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சி குடிநீர் வினியோக மண்டலம் I– க்குட்பட்ட பகுதிகளில் **2016–17–ம்** ஆண்டு, வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை **ரூ.3,50,000/–** க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**1444** நாள் **29.01.2016**–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 17.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. R.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |
| 2. | திரு. P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.76% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.R.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/155/2016)

**தீர்மானம் எண்.1472, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சி குடிநீர் வினியோக மண்டலம் II– க்குட்பட்ட பகுதிகளில் **2016–17–ம்** ஆண்டு, வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை **ரூ.3,50,000/–** க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**1444** நாள் **29.01.2016**–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 17.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. R.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |
| 2. | திரு. P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.76% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.R.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/155/2016)

**தீர்மானம் எண்.1473, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/1746/2015 நாள் 01.02.2016–ன் படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2015–16–ன் கீழ், கீழ்காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி – சன்னதி தெருவில் பொது இடத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல். | 2.00 |
| 2. | குளச்சல் நகராட்சி – அஞ்சாலியம்மன் தெருவில் பொது இடத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல். | 2.00 |
| | **மொத்தம்** | **4.00** |

மேற்காணும் பணிகளில், இந்நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில், பொது இடத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல் பணியினை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 24.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.JES Electricals, Trituapuram | மதிப்பீட்டைவிட 1.50% குறைவு. (ரூ.1,97,000/– |
| 2. | M/s.T.R.Traders, Thazakudy. | மதிப்பீட்டைவிட 3.75% அதிகம். (ரூ. 2,07,500/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.JES Electricals, Trituapuram நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1.50% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1) மேற்காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரத்தை மன்றம் பதிவு செய்யலாம்.

2) M/s.JES Electricals, Trituapuram நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1.50% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/02/2016)

**தீர்மானம் எண்.1474, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 16**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2015–16–ன்** கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட அஞ்சாலியம்மன் தெருவில், பொது இடத்தில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல் பணியினை ரூ.**2.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 24.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.T.R.Traders, Thazakudy. | மதிப்பீட்டைவிட 1.50% குறைவு. (ரூ. 1,97,000/–) |
| 2. | M/s.K.K.Industries, Thazakudy. | மதிப்பீட்டைவிட 5.00% அதிகம். (ரூ. 2,10,000/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.T.R.Traders, Thazakudy. நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1.50% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/02/2016)

**தீர்மானம் எண்.1475, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 17**

இந்நகராட்சி சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளில், நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில், தடுப்புச்சுவர் மற்றும் சாலை அமைத்தல் பணியினை ரூ.**103.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 25.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் Price Bid 29.02.2016 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. K.கிருஷ்ணதாஸ்,<br>ஒப்பந்தத்தாரர்,<br>ராமன்செம்பருத்திவிளை, பழவார். | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திருமதி. T.அம்பிகா,<br>ஒப்பந்தத்தாரர்,<br>கட்டுவிளை, ஆற்றூர், வியனூர். | மதிப்பீட்டைவிட 0.49% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.K.கிருஷ்ணதாஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, Letter of Acceptance வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.இ1/358/2015)

**தீர்மானம் எண்.1476, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 18**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோகப் பணிகளுக்கு தேவையான **4** பணியாளர்களை **89** நாட்களுக்கு (பிப்ரவரி **2016** முதல் ஏப்ரல் **2016** வரை) பணிக்கு அமர்த்துவதற்கான, உத்தேச செலவுத் தொகை ரூ.**1,20,000/**—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**1424** நாள் **29.01.2016**—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 17.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T. சுகுமாரன்,<br>ஒப்பந்தத்தாரர். | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | திரு. P. பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.52% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டு விகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**1) குடிநீர் பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மேற்படி 4 பணியிடங்களுக்கும் 89 நாட்களுக்கு ஒருமுறை மன்ற அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2691/2014)

**தீர்மானம் எண்.1477, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 19**

இந்நகராட்சி எல்கை வரைபடத்தில் (Town Map) Geographic Information System —ஐ பயன்படுத்தி சாலைகள், தெருக்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள், குப்பைத் தொட்டிகள், பொது நல்லிகள், வால்வு பிட்கள், குடியிருப்புகள் ஆகிய அனைத்து கட்டிடங்களின் அமைவிடங்களை அடையாளமிட்டு (Location Marking) வரைபடம் தயார் செய்து, கணனியில் பதிவேற்றம் (Updation) செய்வதன் வாயிலாக நகராட்சி சொத்து விவரங்களை (Assets) முழுமையாக அறிந்து கொள்ளவும், அனைத்து வரிவிதிப்புகளையும் துல்லியமாக தெரிந்து

கொண்டு, நகராட்சி நிதி நிலையை உயர்த்துவதற்கும் வழிவகை செய்வதற்கு ஏதுவாக மேற்படி பணியினை செயல்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/—க்கும், பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு**: நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/430/2016)

**தீர்மானம் எண்.1478, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 20**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/3649/2013 நாள் 10.02.2016—ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013—14—ம் வருட திட்ட செயலாக்கத்திற்கு கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி – திடக்கழிவு மேலாண்மைக்கு குப்பை தொட்டிகள் அமைத்தல். | **2.50** |

மேற்காணும் பணிக்கு, 29.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Southern Solid Waste Management Service, Kootamavu. | மதிப்பீட்டைவிட 0.13% குறைவு. |
| 2. | M/s.Arunai Contech, Chennai. | மதிப்பீட்டு விகிதம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Southern Solid Waste Management Service, Kootamavu நிறுவனம் மதிப்பீட்டை விட 0.13% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/270/2016)

**தீர்மானம் எண்.1479, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.22503/2015/பி1 நாள் 15.02.2016—ன் படி, 2013—14 மற்றும் 2014—15—ம் ஆண்டிற்கான நகராட்சி வருவாய் கணக்கினை பட்டய கணக்கர் வாயிலாக தணிக்கை செய்து நகராட்சியின் வருமானத்தை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த சான்றிதழின் அடிப்படையிலேயே நகராட்சிக்கு 14—வது நிதிக்குழு மானியம் வழங்கப்படும். எனவே இத்தணிக்கை அறிக்கை பெறுவதற்கு பட்டய கணக்கருக்கு உத்தேசமாக ரூ.30,000/— வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/942/2012)

**தீர்மானம் எண்.1480, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 24 வார்டுகளிலும் உள்ள பழைய கட்டிடம் இடிக்கப்பட்டுள்ள வரிவிதிப்புகளும், இடிக்கப்பட்டுள்ள இடத்தில் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள பழைய வரிவிதிப்புகள் கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்யாமல் நிலுவையாக உள்ளது. மேற்படி கட்டிடங்கள் வரிவிதிப்புகள் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிலுவைத் தொகைகள் நீக்கம் செய்ய பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கதவு எண். | வரிவிதிப்புதாரர் பெயர் | வரிவிதிப்பு எண். | நிலுவை காலம் | தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | **வார்டு எண்.1** | | | | | |
| 1 | 1-83A | திரு.கே. ராஜ் | 129 | 2013–14 IIமுதல் 2015–16 II வரை | 160/– | 2013–14 முதல் கட்டிடம் இல்லை. |
| 2 | 1-11C | திருமதி.செல்லதாய் (எ) செல்வி | 10 | 2009–10 IIமுதல் 2015–16 II வரை | 598/– | 2009–10 முதல் கட்டிடம் இல்லை |
| 3 | 1-95/1 | திரு.முகம்மது அப்துல் காதர் | 322 | 2004–05 | 7858/– | 2004–05 முதல் கட்டிடம் இல்லை |
| 4 | 1-39 | திரு.சிங்கராய நாடார் | 48 | 2009–10 I முதல் 2015–16 II வரை | 868/– | 2009–10 முதல் கட்டிடம் இல்லை |
| 5 | 1-53A | திருமதி. லீலா | 78 | 2008–09 I முதல் 2015–16 II வரை | 544/– | 2008–09 முதல் கட்டிடம் இல்லை |
| | **வார்டு எண்.3** | | | | | |
| 1 | 4-81C | திரு.ஷாஜி மீரான் மைதீன் | 1000 | 2006–07 I முதல் 2015–16 II வரை | 660/– | 2006–07 முதல் கட்டிடம் இல்லை |
| | **வார்டு எண்.9** | | | | | |
| 1 | 10-81A | திரு.கிரகோரி | 2696 | 2013–14 I முதல் 2015–16 II வரை | 192/– | 2013–14 முதல் கட்டிடம் இல்லை |
| 2 | 11-41 | திரு.சூசை வியாகுலம் | 2755 | 2002–03 | 113/– | 2002–03 முதல் கட்டிடம் இல்லை |
| | **வார்டு எண்.11** | | | | | |
| 1 | 12-69 | அந்தோணியம்மாள் | 3274 | 2002–03 II | 67/– | 2002–03 முதல் கட்டிடம் இல்லை |
| | **வார்டு எண்.15** | | | | | |
| 1 | 25-67C3 | திரு.பல்தாசன் | 4527 | 2001–02 II 2002–03 I | 82/– | 2001–02முதல் கட்டிடம் இல்லை |
| | **வார்டு எண்.16** | | | | | |
| 1 | 24-42 | திரு.சொக்கலிங்கம் | 4773 | 2012–13 I முதல் 2015–16 II வரை | 520/– | 2012–13 முதல் கட்டிடம் இல்லை |
| 2 | 16-23/1 | திரு. ஜார்ஜ் | 5122 | 2010–11 I முதல் 2015–16 II வரை | 2688/– | 2010–11 முதல் கட்டிடம் இல்லை |
| 3 | **வார்டு எண்.4** | | | | | |
| 4 | 4-60/1 | திருமதி.பாத்திமா பீவி | 1387 | 2001–02 II முதல் 2015–16 II வரை | 725/– | வரிவிதிப்பு எண்.9515 |
| | **வார்டு எண்.24** | | | | | |
| 1 | 24-131/1 | திரு.அழகேசன் | 19531 | 2012–13 I முதல் 2015–16 II வரை | 872/– | 2012–13 முதல் கட்டிடம் இல்லை |
| 2 | 23-70A2 | திருமதி. றோஸ்மேரி | 7316 | 2007–08 II முதல் 2015–16 II வரை | 1351/– | வரிவிதிப்பு எண்.37008 |
| | | | | **மொத்தம்** | **17298/–** | |

**அ.குறிப்பு:** மேற்படி கட்டிடங்கள் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இடிக்கப்பட்ட கட்டிடங்களின் வரிவிதிப்புதாரார் களிடமிருந்து நிலுவைத் தொகை பெற வழிவகை இல்லை என்பதால் தமிழ்நாடு நகராட்சி சட்ட விதிகளின்படி நீக்கம் செய்யலாம். நிலுவை ரூ.17,298/– கணனியிலும், கேட்பு பதிவேட்டிலும் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/2288/2015)

**தீர்மானம் எண்.1481, தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண். 23

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் சொத்துவரி, குடிநீர் கட்டணம் நிலுவைத் தொகை செலுத்தாததால் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கட்டிட உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | வரிவிதிப்பு எண் | | நிலுவை விவரம் | | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | சொத்து வரி | குடிநீர் கட்டணம் | சொத்து வரி | குடிநீர் கட்டணம் | |
| 1 | திரு.தாமஸ் ரெமிங்டன் சுதர்லேண்ட், க.எண.1–207/7, கல்லத்திவிளை. | 8013 | 171/– | 125/– | 3570/– | 3695/– |
| 2 | திருமதி.மரிய மதலேனாள் க.எண்.3–21.எ பர்னட்டிவிளை | – | 262/– | – | 3012/– | 3012/– |
| 3 | திரு.சண்முகநாடார், க.எண்.26–91. அழகனார்கோட்டைவிளை | 5316 | 2398/– | 368/– | 2826/– | 3194/– |
| 4 | திரு.ஜெயக்குமார், க.எண்.26–92, அழகனார்கோட்டைவிளை | 5317 | 2400/– | 368/– | 2826/– | 3194/– |
| 5 | திரு.தியோன்ஸ், க.எண். 9–70, மரமடி. | 2370 | 1169/– | 256/– | 2454/– | 2710/– |
| 6 | திரு.சகாயராஜ் லலிதா க.எண்.4–756, கேஎஸ்எஸ்எஸ் காலனி | 9655 | 743/– | 728/– | 624/– | 1352/– |
| 7 | திருமதி.சரோஜா நாகராஜன் க.எண்.4–810, அமிர்தானந்தமாய் காலனி. | 9763 | 5339/– | 728/– | 938/– | 1644/– |

**அ.குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/471/2015)

**தீர்மானம் எண்.1482, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 24**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி வடிகால்கள் துார் வாருதல், அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி 17 நபர்கள் கொண்ட ஜெயம் மகளீர் சுயஉதவிக் குழு மூலம் பணிகள் மேற்கொள்ள ஜனவரி 2016 முதல் மார்ச் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1402, நாள் 31.12.2015–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 நபர்களை கொண்ட ஜெயம் மகளீர் சுயஉதவிக் குழு மூலம் 89 நாட்களுக்கு (ஏப்ரல் 2016 முதல் ஜுன் 2016 வரை) மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள்25.04.2013–ல் தெரிவித்துள்ள தினக்கூலி அடிப்படையில் பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1177/2014)

**தீர்மானம் எண்.1483, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 25**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி பணிகள் செய்ய 11 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுயஉதவிக் குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள ஜனவரி 2016 முதல் மார்ச் 2016 வரை 89 நாட்களுக்கு, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1401, நாள் 31.12.2015–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 11 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுயஉதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு (ஏப்ரல் 2016 முதல் ஜுன் 2016 வரை) பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,30,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1368/2014)

**தீர்மானம் எண்.1484,, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 26**

இந்நகராட்சியில் 26.01.2016 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சிக்காக புதிய மூவர்ணக் கொடி வாங்கியது, தோரணங்கள், மைக்செட் மற்றும் இதர செலவுகள் தொகை ரூ.2,360/– ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1829/2015)

**தீர்மானம் எண்.1485, தீர்மானிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்